முற்பகல் 11-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உலகத்து உருண்டை எங்கும் வாழ்கிற தமிழினத்தை இமைக்குள் விழியாக இருத்தி, தம் உயிராய்க் காக்கின்ற, தமிழினத்துக் கவசம், மக்களால் நான், மக்களுக்காக நான், மக்களோடு நான், என்றே மாதவத்தில் வாழுகிற மாதரசி மாண்புமிகு அம்மா அவர்கள், மண் பயனுற மாநிலத்து உரிமைக்கே ஓயாது ஒலிக்கின்ற ஒப்பில்லா போர் முரசு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி), ஆறடி நீரைத்தேக்கி, ஐந்து மாவட்டங்கள் பயனுற, நான்கு திசையோரும் வியந்திட, மூன்றாண்டு ஆட்சியில் முழுவதும் வளர்ச்சி தந்த, இருவிரல் காட்டி வெற்றியைப் பெறுகிற முதலானவர், எங்கள் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முல்லைப் பெரியாற்றிலும் முடிசூடினார், மாண்புமிகு அம்மா அவர்கள். நம் தாயிருக்கப் பயமில்லை. இனி தண்ணீருக்குப் பங்கமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) நம் தாயிருக்கப் பயமில்லை. இனி தண்ணீருக்குப் பங்கமில்லை. முல்லைப் பெரியாறு, இனி இல்லை, தண்ணீர்த் தகராறு. (மேசையைத் தட்டும் ஒலி) முல்லைப் பெரியாறு, இனி இல்லை, தண்ணீர்த் தகராறு. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மாண்புமிகு உறுப்பினர்களின் நன்றி உணர்வுகளோடு, என்னுடைய நன்றியையும் இணைத்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

## 4. சிறப்புக் கவன ஈர்ப்பு

### கொடுங்கையூர் காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட கைதி கோபால் மரணம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 16-7-2014 அன்று கொடுங்கையூர் காவல் நிலையத்தில் கோபால் என்பவர் மரணமடைந்தது குறித்து தேசிய முற்போக்கு திராவிட கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ர.ம. பாபு முருகவேல், திரு. க. தினகரன், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், திரு. க. பாலகிருஷ்ணன், திரு. கே. தங்கவேல், திரு. ப. டில்லி பாபு, திரு. இரா. அண்ணாதுரை,

2014 ஜூலை 18] [பேரவைத் தலைவர்]

திரு. ஆர். ராமமூர்த்தி, இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே. உலகநாதன், திரு. வெ. பொன்னுப்பாண்டி, திரு. கு. லிங்கமுத்து, திரு. டி. இராமச்சந்திரன், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், புதிய தமிழகம் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோர் பேரவை விதி 55-ன் கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இது குறித்து அறிவிப்புக் கொடுத்தவர்கள் கட்சிக்கொருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரலாம். தேசிய முற்போக்கு திராவிட கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள், அரசின் கவனத்தை மட்டும் ஈர்க்க வேண்டும்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு முன்தினம் பெரம்பூர் தொகுதிக்குட்பட்ட B6 கொடுங்கையூர் காவல் நிலையத்திலே இரண்டு கொலை வழக்குகள், ஐந்து கொலை முயற்சிகளிலே சம்பந்தப்பட்ட கோபால் என்கிற கைதி, காவல் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டபோது அங்கே காவல் நிலையத்திலே மரணமடைந்துவிட்டார். குற்றமிழைக்கக்கூடியவர்கள் அரசு மற்றும் பொது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக் கூடியவர்களை இரும்புக் கரம் கொண்டு அடக்க வேண்டுமென்பதிலே தேசிய முற்போக்கு திராவிட கழகத்திற்கு எந்தவிதமான மாற்றுக் கருத்துமில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, அதே நேரத்திலே அரசுக்கு பங்கம் விளைவிக்கக்கூடிய மிகச் சில அதிகாரிகள் சட்டத்தைத் தங்கள் கையிலே எடுத்துக்கொள்வதை இந்த அரசு கடுமையாகக் கண்டிக்கவேண்டும். அதே நேரத்திலே மனித உரிமைகள் மீறப்படக்கூடாது என்பதில் அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பூர் தொகுதிக்குட்பட்ட கொடுங்கையூர்

[திரு. அ. சவுந்தரராசன்] [2014 ஜூலை 18

காவல் நிலையத்திற்கு 27 வயதான கோபால் என்பவர் அழைத்துச் செல்லப்படுகிறார். அங்கே **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதற்குப் பதிலளிக்க இருக்கிறேன். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது எந்த ஆதாரமும் இல்லாமல் அபாண்டமான குற்றச்சாட்டை இப்படிச் சுமத்திப் பேசக்கூடாது. மூத்த உறுப்பினர் மாண்புமிகு சவுந்தரராசன் அவர்கள், அங்கே காவல் நிலையத்தில் ** என்று சொல்கிறார். கைதி ** அவர் பார்த்தாரா? எந்த ஆதாரத்தை வைத்துக்கொண்டு இதைப் பேசுகிறார்? ஆகவே ** என்ற சொற்களை நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன் அவர்கள் கூறிய அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. ஆதாரமில்லாமல் பேசாதீர்கள். கவனத்தை ஈர்த்து உட்காருங்கள். அவ்வளவுதான்.

**திரு. அ. சவுந்தரராசன்:** இரண்டே வார்த்தைகள். கோபால் அவர்கள் காவல் நிலையத்தில் மரணமடைந்தார். அந்தக் காவல் நிலையத்தினுடைய ஆய்வாளரும், துணை ஆய்வாளரும் இடைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால், காவல் துறை ஆணையர் அவர்கள், அவர்களுடைய கவனக்குறைவிற்காகத்தான் அவர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டனர் என்று சொல்லியிருக்கிறார். ஆகவே, இதற்கு ஒரு நீதி விசாரணை தேவை. இப்போது அந்தக் குடும்பத்திற்கு நிவாரணம் தேவை என வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அதெல்லாம் இல்லை. கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லிவிட்டு உட்காருங்கள். (குறுக்கீடு) இந்தச் சம்பவம் குறித்து அரசினுடைய கவனத்தை ஈர்க்கிறேன் என்று கூறி உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

*முற்பகல் 11-35*

**திரு. டி. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 16-7-2014 ஆம் தேதியன்று கொடுங்கையூர், தாமோதரன் நகரைச் சேர்ந்த திரு. கோபால், 27 வயது கொண்டவர், போலீஸ் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு மர்மமான முறையிலே இறந்துள்ளார். ஆகவே, இதில் அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 27 வயது கோபால் விசாரணைக்காக காவல் நிலையத்திற்கு அழைக்கப்பட்டு அங்கே இறந்துவிட்டார் என்ற செய்தி சம்பந்தமாக, ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர் பணி நீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதையும் நான் அறிவேன். ஆனால், ஜனநாயக நாட்டிலே விசாரணைக் கைதி சாவு என்பது பிரச்சினைக்குரிய ஒன்று.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினுடைய கவனத்தை ஈர்ப்பதாகச் சொல்லி அமருங்கள்.*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து இதைச் சரியாக விசாரணை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுங்கையூர் காவல் நிலையத்தில், போலீஸ் காவலில் இருந்தபோது கோபால் என்பவர் இறந்தது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் அரசின் கவனத்தை ஈர்த்துள்ளனர். இந்தச் சம்பவம் குறித்த உண்மை நிலையை நான் எடுத்துரைக்க விரும்புகிறேன்.*

*15-7-2014 அன்று இரவு, பார்த்திபன் என்பவர் கொடுங்கையூர் காவல் நிலையத்தில் அளித்த புகாரில் தன்னை மகேஷ் மற்றும் கோபால் ஆகியோர் கொடுங்கையூர் ஆர்.ஆர். நகரில் வைத்து தாக்கியதாகத் தெரிவித்தார். அவரது புகாரின் பேரில்*

வழக்கு பதிவு செய்த உதவி ஆய்வாளர் பாண்டியராஜா, காவலர்களுடன் விரைந்து சென்று எழில் நகர் அருகில் இருந்த எதிரி கோபால் என்பவரைக் கைது செய்து காவல் நிலையம் கொண்டு வந்தார்.

16-7-2014 அன்று நடத்திய விசாரணைக்குப் பின், காலை 11-00 மணியளவில் கோபாலை நீதிமன்றக் காவலுக்கு அழைத்துச் செல்லத் தயாரான நிலையில், அவர் திடீரென உடல் நலக் குறைவு ஏற்பட்டுள்ளதாகவும், அசௌகரியமாக உள்ளதாகவும் தெரிவித்தார். உடனடியாக அருகிலுள்ள பவித்ரா என்ற தனியார் மருத்துவமனைக்கு காவல் துறையினர் அவரை அழைத்துச் சென்றனர். அங்கு அவரைப் பரிசோதனை செய்த மருத்துவர், கோபால் இறந்துவிட்டதாகத் தெரிவித்தார். பின்னர் அவரது உடல் அரசினர் ஸ்டான்லி மருத்துவமனை பிரேதக் கிடங்கிற்குக் கொண்டு செல்லப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக, கொடுங்கையூர் காவல் உதவி ஆய்வாளர் பாண்டியராஜா கொடுத்த அறிக்கையின் பேரில், குற்ற விசாரணை முறைச் சட்டம், பிரிவு 176(1-A)-ன்படி குற்றவியல் நடுவர் அவர்களுக்கு விசாரணை கோரி அனுப்பப்பட்டுள்ளது.

கோபால்மீது இரண்டு கொலை வழக்குகள், ஒரு கொலை முயற்சி வழக்கு மற்றும் 4 இதர வழக்குகள் வடசென்னை பகுதியிலுள்ள காவல் நிலையங்களில் நிலுவையில் உள்ளன. இவர் குற்ற கும்பலைச் சேர்ந்த பொக்கை ரவி மற்றும் காக்காதோப்பு பாலாஜி ஆகியோரின் நெருங்கிய கூட்டாளியாக இருந்தவர். 2013 ஆம் ஆண்டு, குண்டர்கள் தடுப்புச் சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்ட கோபால் சென்ற மாதம் வெளிவந்துள்ளார். வியாசர்பாடியைச் சேர்ந்த இறந்துபோன கோபால் குறித்த சரித்திரப் பதிவேடு காவல் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

குற்றவியல் நடுவர் விசாரணை நிலுவையில் உள்ள இந்தச் சூழ்நிலையில், இந்தச் சம்பவத்தில், கொடுங்கையூர் காவல் நிலைய ஆய்வாளர் பாஸ்கரன் மற்றும் உதவி ஆய்வாளர் பாண்டியராஜா ஆகியோர் போலீஸ் காவலில் உள்ள கைதியைக் கையாளுவதில் தகுந்த முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்ளாமல் கவனக் குறைவாக இருந்தமைக்காக, தற்காலிக பணி இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

2014 ஜூலை 18] [செல்வி ஜெ ஜெயலலிதா]

தலைமை பெருநகர குற்றவியல் நடுவர் விசாரணை அறிக்கை பெற்றபின், அதன் அடிப்படையில் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், 2013 மற்றும் 2014-ல் குற்ற வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் காவல் துறை விசாரணைக்கு வந்தபோது அல்லது காவல் துறையினரின் பாதுகாப்பிலிருந்தபோது மரணமடைந்த சம்பவங்கள் 20 ஆகும்.

மூன்று சம்பவங்களில் கையும் களவுமாகப் பொதுமக்களால் பிடிக்கப்பட்ட குற்றவாளிகள், பிடிபடும் சமயத்தில் பொதுமக்களால் தாக்கப்பட்டு பிறகு காவல் நிலையத்தில் ஆஜர் செய்யப்பட்ட நிலையில் காவல் பாதுகாப்பில் இருக்கும்பொழுதோ, மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும்பொழுதோ இறந்துள்ளனர்.

மேலும் நான்கு சம்பவங்களில், குடிபோதையில் பொது இடத்தில் தகராறு செய்தவர்கள் அல்லது குடிபோதையில் வாகனம் ஓட்டியவர்கள் காவல் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டபின் மரணம் அடைந்துள்ளனர்.

முற்பகல் 11-40

மூன்று வழக்குகளில் விசாரணையில் இருக்கும்பொழுது குற்றவாளிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். ஒரு சம்பவத்தில் வழிப்பறிக் குற்றவாளியைக் கைது செய்ய முயற்சித்த காவல் துறையினரை அவர் அரிவாளால் தாக்க, தற்காப்பிற்காக பலப்பிரயோகம் செய்ய நேரிட்டபின் குற்றவாளி மரணமுற்றுள்ளார். மற்றொரு சம்பவத்தில் தடை செய்யப்பட்ட பரிசுச் சீட்டு விற்பது குறித்து, விசாரணை செய்யப்பட்ட நபர், காவல் நிலையத்திலிருந்து அனுப்பப்பட்ட பின் சில மணி நேரம் கழித்து இறந்துள்ளார். வழிப்பறி செய்துகொண்டிருந்த நபரை காவல் துறையினர் கையும் களவுமாகப் பிடிக்கும்போது அவர் தப்பி ஓட முயன்றபிறகு மயக்கமுற்று மருத்துவமனை செல்லும் வழியில் இறந்துள்ளார். மேலும், ஆறு சம்பவங்களில், காவல் நிலையத்தில் விசாரணைக்காக வைக்கப்பட்டிருந்த குற்றவாளிகள் உடல் நலக் குறைவினால் மரணமடைந்துள்ளனர். பிரேதப் பரிசோதனை அறிக்கைகளில் ஐந்து வழக்குகளில் மாரடைப்பு, வலிப்பினால் ஏற்பட்ட மூச்சுத் திணறல் ஆகிய காரணங்களால் மரணம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட சம்பவங்கள் அனைத்திலும் முறையாக வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, நீதித் துறை நடுவர்களின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, பிரேத மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான சம்பவங்களில் நோயின் காரணமாக அந்நபர்கள் இறந்து போனது தெரிய வந்துள்ளது. எனினும், இச்சம்பவங்களின்போது, சம்பந்தப்பட்ட காவல் ஆளுநர் தங்கள் பணியில் கவனக் குறைவாக இருந்த காரணத்திற்காக தற்காலிகப் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். பெரும்பாலான வழக்குகளில் இறப்பிற்கு காவல் துறையினர் காரணம் அல்ல என நீதித் துறை நடுவர்கள் தங்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

பொதுவாக, காவல் துறையினர், வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் விசாரணையில் இருக்கும்போதும், அவர்களை வழிக்காவல் செய்யும்போதும், விழிப்புடன் இருந்து வருகின்றனர். சில சமயங்களில், எதிர்பாராத வகையில் சம்பந்தப்பட்டவர்களுக்கு இருக்கும் நோயினால் திடீரென உடல் நலக் குறைவு ஏற்பட்டு, மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியிலோ அல்லது மருத்துவமனையிலோ இறந்து விடுகிறார்கள். சில வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னரோ அல்லது விசாரணைக்குப் பிறகு காவல் நிலையத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட பின்னரோ, உடல் நலக் குறைவு காரணமாகவோ அல்லது தற்கொலை செய்துகொண்டோ உயிரிழந்து விடுகின்றனர். சிலர் நீதிமன்றக் காவலில் சிறையில் இருக்கும்போது, உடல் நலக் குறைவால் இறந்து விடுகின்றனர். இதுபோன்ற மரணங்களை காவல் நிலைய மரணங்கள் எனக் கூறுவது சரியாகாது.

காவலில் இருக்கும்போது, மரணம் ஏற்பட்டாலோ அல்லது மரணம் குறித்து சந்தேகம் தெரிவிக்கப்பட்டாலோ, குற்ற விசாரணை முறைச் சட்டம், பிரிவு 176-(1-A)-ன்படி நீதிமன்ற நடுவர் புலன் விசாரணை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார். குறைந்தபட்சம் இருவர் அடங்கிய மருத்துவக் குழுவினரைக் கொண்டு பிரேதப் பரிசோதனை நடத்தப்படுகிறது. பிரேதப் பரிசோதனை வீடியோமூலம் பதிவு செய்யப்படுகிறது. இதன்காரணமாக, இம்மரணங்கள் குறித்து, நியாயமான, பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்படுகிறது. அவ்விசாரணையின்

முடிவில் காவல் துறையினர்மீது தவறேதும் இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டால், சம்பந்தப்பட்டவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், சந்தேக நபர்கள் அல்லது எதிரிகளை காவல் நிலைய பாதுகாப்பில் வைத்திருக்கும்போது, அவர்களை விழிப்புடன் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து, அரசு காவல் துறையினருக்கு தகுந்த விழிப்புணர்வு ஏற்படுத்தியுள்ளதோடு, தேவையான அறிவுரைகளையும் வழங்கியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

## 5. கவன ஈர்ப்பு

### தமிழகத்தில் சாலை விபத்துகளால் உயிரிழப்புகள் அதிகரித்து வருவதைத் தடுக்க நடவடிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன், திரு. கே. தங்கவேல், திரு. ஏ. லாசர், திரு. ப. டில்லி பாபு, திரு. இரா. அண்ணாதுரை, திரு. க. பீம்ராவ், திரு. வீ.பி. நாகைமாலி, திரு. ஆர். ராமமூர்த்தி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

*முற்பகல் 11-45*

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1-3-2014 . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், நீங்கள் Agenda-வில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் பாருங்கள். அதை, அப்படியே படித்தால்போதும். (குறுக்கீடு) அதுதான் முறை, அதுதான் விதி. (குறுக்கீடு) அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்வார் அல்லவா? நீங்கள் அதைப் படியுங்கள். அதைப் படித்தால் மட்டும் போதும். படியுங்கள். Agenda-வில் இருப்பதை அப்படியே படியுங்கள்.